# தாமான் தாசேக் தித்திவங்சாவில் வணிகர்களை டிபிகேஎல் கண்காணிக்கும்





கோலாலம்பூர், ஜன. 24- சுற்று வட்டாரவாசிகளின் சௌகரியத்தை உறுதி செய்யும் வகையில் தாமான் தாசேக்கில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் நடவடிக்கைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) அணுக்கமாகக் கண்காணிக் கும். வணிக லைசென்ஸ் இன்றி ஜாலான் குவாந்தான், ஜாலான் தெமர்லோ, ஜாலான் தெம்பேலிங் போன்ற பகுதிகளில் மிக அதிகமான எண்ணிக்கையில் வணிகர்கள் வியாபாரம் செய்யத் தொடங்கி இருக்கின்றனர். இதனால் வாகனப் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி இருக்கிறது என்று தாமான் தித்திவங்சாவாசிகள் புகார் செய்திருப்பதன் தொடர்பில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பிரதமர் இலாகா (கூட்டரசுப் பிரதேசம்) அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நேற்று முன்தினம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு டிபிகேஎல் அமலாக்கப் பிரிவினருடன் தாம் ஒரு சந்திப்பை நடத்தி இருப்பதாக அவர் சொன்னார். இந்தப் பகுதியில் 108 வியாபாரிகள் வணிகம் செய்கின்றனர். இவர்களுள் 39 பேர் மட்டுமே லைசென்ஸ் வைத்திருக்கின்றனர். மற்ற 69 பேர் லைசென்ஸ் இன்றி அங்கு வியாபாரம் செய்து கொண்டிருப் பது கண்டுபிடிக்கப்பட்டது.

அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் அணுக்கமாகக் கண்காணிக்கு மாறு டிபிகேஎல் அமலாக்கப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டிருக் கிறது என்று அமைச்சர் அந்த அறிக்கையில் தெரிவித்தார்.